செய்திவெளியீடு எண்.40/2017 நாள் :08.06.2017

# கல்குவாரிகளிலிருந்து குடிநீர் – குடிநீர் வாரியம் அறிவிப்பு

------

குறைவான பருவமழை பொழிவு காரணமாக சென்னை நகருக்கு தண்ணீர் வழங்கும் ஏரிகளின் நீர் மட்டம் முற்றிலும் வறண்டு விட்டது. இதனை எதிர்நோக்கி சென்னை புறநகர் பகுதிகளில் இருக்கும் கல்குவாரிகளில் தேங்கியுள்ள மழைநீரை பயன்படுத்த சென்னைக்குடிநீர் வாரியம் ஆய்வு மேற்கொண்டது.

இதையடுத்து முதற்கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு அருகே சிக்கராயபுரத்தில் உள்ள 22–க்கும் மேற்பட்ட குவாரிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. பல அடி ஆழத்தில் உள்ள குவாரியில் இருந்து தண்ணீரை எடுப்பது குறித்து பல்வேறு ஆய்வுகள், சோதனைகள் செய்யப்பட்டன. தேங்கியிருக்கும் நீரின் தரத்தை கிண்டி கிங் இன்ஸ்ட்டியூட், அண்ணா பல்கலை கழகத்தின் சுற்றுச் சூழல், புவி அமைப்பியல் துறை உட்பட பல துறை நிபுணர்கள் ஆய்வு செய்தனர். கல்குவாரிகளில் தேங்கியுள்ள நீர் செம்பரம்பாக்கம் ஏரிக்கரை அருகே உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரித்து, சென்னை நகருக்கு வினியோகம் செய்ய உகந்தது என ஆய்வின் முடிவில் தெரிய வந்தது. குவாரிகளிலுள்ள நீரை குழாய்கள் மூலம் செம்பரம்பாக்கம் ஏரிக்கரையில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று உரிய சுத்திகரிப்பிற்கு பின் குடிநீர் விநியோகத்திற்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக, ரூபாய் 13.63 கோடி மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு தற்போது பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தினசரி 3 கோடி லிட்டர் வீதம் சுமார் 300 கோடி லிட்டர் நீர் 100 நாட்களுக்கு பெற திட்டமிடப்பட்டது. இதற்காக நான்கு கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் பதிக்கும் பணிகள், நீரேற்றுதலுக்கான பம்பு செட்டுகள் மற்றும் ஜெனரேட்டர்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று அனைத்துப் பணிகளும் 30 நாட்களுக்குள் முடிக்கப்பட்டன.

மேலும், 02.06.2017 முதல் சோதனை ஓட்டமும் வெற்றிகரமாக நடைபெற்று, சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் திருப்திகரமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சென்னை பெருநகரத்தின் குடிநீர் தட்டுப்பாட்டை குறைக்கும் வகையில் இக்குவாரிகளிலுள்ள நீர் 09.06.2017 வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து தினமும் 3 கோடி லிட்டர் வீதம் செம்பரம்பாக்கம் நீரேற்று நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, சுத்திகரித்து மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்தப்பணியினை குறைவான நேரத்தில் வடிவமைத்து நிறைவேற்றிய பொறியாளர்கள் அடங்கிய வறட்சி பணிகளுக்கான சிறப்பு குழுவில் பணியாற்றிய

1. திரு. ஜி. சத்தியமூர்த்தி, தலைமைப்பொறியாளர்
2. திரு. ஏ.ஆர். கிருஷ்ணமூர்த்தி, மேற்பார்வை பொறியாளர்
3. திரு. ஏ. பரஞ்ஜோதி, செயற்பொறியாளர்
4. திரு. மு.ரா. ஜெய்சங்கர், உதவிப் செயற்பொறியாளர்
5. திரு. எம். லெனின், உதவிப் பொறியாளர்
6. திரு. எம். சதீஷ், உதவிப் பொறியாளர்

ஆகியோருக்கு சென்னைக்குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண் ராய்., இ.ஆ.ப., அவர்கள் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.









மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்